**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P.175 /2022**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **PW.1** |
|---|---|---|
| Name | : | ராமசாமி |
| Father's / Husband Name | : | அவினாசி |
| Village / முகவரி | : | செங்கம்பள்ளி |
| Taluk / தாலுக்கா | : | அன்னூர் |
| Age / வயது | : | 28 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 03rd July 2025

**முதல் விசாரணை**

நான் செங்கம்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | 10.11.2022 | முதல் தகவல் அறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | 10.11.2022 | பார்வை மகஜர் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | 10.11.2022 | மாதிரி வரைபடம் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 23.11.2022 | TN 39 CW 9905 பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | 21.11.2022 | TN 38 CE 5240 மோட்டார் வாகன ஆய்வறிக்கை | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | 07.11.2022 | மனுதாரரின் விபத்து பதிவேடு | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | 30.11.2022 | மனுதாரரின் காயச்சான்றிதழ் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | 24.02.2020 | TN 39 CW 9905 பைக்கின் மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்று | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.8 |
| 9 | 25.07.2010 | TN 38 CE 5240 மோட்டார் வாகனத்தின் பதிவு சான்றிதழ் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | 28.04.2014 | மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | 05.11.2001 | 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | 02.11.2022 | TN 38 CE 5240 மோட்டார் வாகனத்தின் காப்பீடு சான்று | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.12 |
| 13 | 07.11.2022 to 09.11.2022 | மனுதாரரின் Discharge Summary | அசல் | ம.சா.ஆ.13 |
| 14 | | மனுதாரருக்கு செலவு செய்த மருத்துவ பில்கள் (எண்ணிக்கை 1 to 8) மொத்தம் ரூ.43,218/- | அசல் | ம.சா.ஆ.14 |
| 15 | | மனுதாரரின் காயங்களின் புகைப்படங்கள் | அசல் | ம.சா.ஆ.15 |
| 16 | | கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டதற்கான நோட் புத்தகம் | அசல் | ம.சா.ஆ.16 |
| 17 | 17.12.2022 | இறுதி அறிக்கை | பதிவிறக்க | ம.சா.ஆ.17 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நகல் | |
| 18 | 27.04.2018 | மனுதாரரின் பான் கார்டு | நகல் | ம.சா.ஆ.18 |
| 19 | | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.19 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் வந்தேன். அன்னூரில் இருந்து மேட்டுப்பாளையம் நோக்கி தென்திருப்பதி நால்ரோட்டிற்கு அருகே விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் நால் ரோடு சந்திப்பு என்பதால் நான் எதிரில் வரக்கூடிய வாகனத்தை பார்த்து வாகனத்தை ஓட்டி இருக்க வேண்டும் என்றும் எதிரே வந்த வாகனம் இன்டி கேட்டர் போட்டு வந்தது என்றும் நான் கவனிக்காமல் வாகனத்தை திருப்பி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல முதல் விசாரணை வாக்குமூலத்தில் மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை எ ன்றால் சரியல்ல.

மனுவில் சொல்லியது போல் பிளாஸ்டிக் சர்ஜரி செய்வதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்ததால் இழப்பீடு கோர இயலாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு எந்த நிலையில் இருந்தேனோ அதே நிலையில் இருக்கிறேன் என்றும் எனக்கு நிரந்தர ஊனம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K.Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்